**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.II, SANKARI</u>**

## <u>DEPOSITION OF WITNESS</u>

*(Chapter XXIII Code of Criminal Procedure)*

**MC.No.02/2022** **DATE : 25.05.2023**

ம.சா.**1**

| | | | |
|---|---|---|---|
| Name | : மதுபாலா | Husband's Name | : ஜெயகாந்தன் |
| District | : சேலம் | Taluk | : சங்ககிரி |
| Village | : வேம்படிதாளம் | Calling | : ஆசிரியை |
| Religion | : இந்து | Age | : - |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.05.2023.

<u>எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

1) நான் என்ன படித்துள்ளேன் என்றால் MCA படித்துள்ளேன். நான் திருமணத்திற்கு முன்பாக வேலை செய்து வந்தேனா என்றால் இல்லை. திருமணத்திற்கு பிறகு நான் வேலை செய்து வருகிறேனா என்றால் தற்போது தான் மகாரிஷி வித்யா மந்திர் என்னும் ஒரு தனியார் பள்ளியில் ஆசிரியையாக பணிசெய்து வருகிறேன். நான் என்ன சம்பளம் வாங்கி வருகிறேன் என்றால் மாதம் ரூ.6,000/- சம்பளம் பெற்று வருகிறேன்.

2) நான் மாதம் ரூ.6,000/- சம்பளம் பெற்று வருகிறேன் என்பதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளேனா என்றால் இல்லை. எனது மகனும் அதே பள்ளியில் தான் படித்து வருகிறார் என்றால் சரிதான். எனது பிரமாண பத்திரிக்கையில் குறிப்பிட்டுள்ள கதவு எண்.5/66, சந்தைபேட்டை, வேம்படிதாளம் கிராமம் என்ற முகவரி தான் என்னுடைய முகவரி என்றால் சரிதான். நான் தற்போது வக்கீல் வீடு, அருவங்காடு, ராக்கிப்பட்டியில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். நான் கடந்த 2 வருடங்களாக இந்த முகவரியில் தான் வசித்து வருகிறேன் என்றால் சரிதான்.

3) எதிர்மனுதாரர் என்ன படித்துள்ளார் என்றால் MBA படித்துள்ளார். அவர் திருமணத்திற்கு முன்பு எங்கு வேலை செய்து வந்தார் என்றால் சேலத்தில் உள்ள கிரீன் விஷன் டெக்னாலஜியில் மார்க்கெட்டிங் துறையில் வேலை செய்து வந்தார். கிரீன் விஷன் டெக்னாலஜியின் என்ற நிறுவனத்தின் தலைமையகம் எங்கு உள்ளது என்றால் பெங்களூருவில் உள்ளது. அதன் கிளை நிறுவனங்கள் எங்குள்ளது என்றால் ஆத்துார், சின்னசேலம், மேட்டுர், மேச்சேரி ஆகிய இடஙகளில் உள்ளது. அவர் என்ன சம்பளம் வாங்கி வந்தார் என்றால் ரூ.30,000/- மாதம் சம்பளம் வாங்கி வந்தார்.

4) எதிர்மனுதாரர் என்ன சம்பளம் வாங்கி வந்தார், எந்த நிறுவனத்தில் வேலை பார்த்து வந்தார் என்பதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா

என்றால் இல்லை. நான் சொன்னவாறு அந்த நிறுவனத்தில் அவர் வேலை பார்க்கவில்லை என்றும், அவர் லோக்கலில் தான் வேலை செய்து வருகிறார் என்றால் சரியல்ல. நான் தற்போது எந்த முகவரியில் வசித்து வருகிறேன் என்ற தகவலை எனது பிரமாண பத்திரிக்கையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை.

5) நான் திருமணம் ஆகி எத்தனை வருடங்கள் எதிர்மனுதாரருடன் வாழ்ந்தேன் என்றால் 3 வருடங்கள் வாழ்ந்தேன். நான் எத்தனை நாட்கள் எதிர்மனுதாரரின் பெற்றோருடன் கூட்டு குடும்பமாக வாழ்ந்தேன் என்றால் 6 மாத காலம் வாழ்ந்தேன். நான் எதிர்மனுதாரரின் பெற்றோருடன் 3 மாதம் காலம் தான் வாழ்ந்தேன் என்று நிரூபண பத்திரிக்கையில் சொல்லிவிட்டு தற்போது வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6) நானும், எதிர்மனுதாரரும் எந்த இடத்தில் தனியாக குடியேறினோம் என்றால் அவரின் பெற்றோர்களின் வீட்டில் இருந்து 5 நிமிடத்தில் செல்லக்கூடிய ஒரு வீட்டில் குடியேறினோம், பின்னர், நான் கருவுற்றதால் மீண்டும் ஒன்றாக வாழ்ந்தோம். நான் எதிர்மனுதாரருடன் தனிக்குடித்தனம் நானாக சென்றேனா அல்லது எதிர்மனுதாரரின் பெற்றோர்கள் குடி வைத்தார்களா என்றால் அவரின் பெற்றோர்கள் தான் வைத்தார்கள். நானும், எதிர்மனுதாரரும் அப்போது தனியாக தான் வாழ்ந்தோம் என்றால் சரிதான். நாங்கள் தனிக்குடித்தனம் வந்தபிறகு எனது மாமனார், மாமியாருடன் பேச்சுவார்த்தையில் இருந்தேனா என்றால் பேசிக்கொண்டு தான் இருந்தேன்.

7) திருமணம் ஆகி எத்தனை நாட்கள் கழித்து கருவுற்றேன் என்றால் 1 வருடம் கழித்து கருவுற்றேன். ஒருவர் கர்ப்பமாவது பெண்ணின் மனநிலை மற்றும் உடல்நிலை பொறுத்தது என்றும்,நான் வழக்கிற்காக எனது மாமியார் கொடுமை செய்தார் என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னை எனது மாமியார் கர்ப்பம் தெறிக்கவில்லை என என்ன கொடுமை செய்தார் என்றால் வார்த்தையால் கொடுமை செய்தார், தனது மற்ற உறவுக்கார பெண்ணுடன் ஒப்பிட்டும், எனது உடல்நிலை குறித்தும் குறிப்பிட்டு பேசுவார். எதிர்மனுதாரரின் தாயார் எனக்கு அறிவுரை தான் வழங்கினார் என்றும், அதனை நான் கொடுமை என தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

8) GVK மருத்துவமனையில் நான் எதற்காக போய் பரிசோதனை செய்தேன் என்றால் தைராய்டு பிரச்சனைக்காக பரிசோதனை செய்தேன், ஆனால் எனக்கு தைராய்டு இல்லை என மருத்துவர்கள் சொல்லிவிட்டார்கள். GVK மருத்துவமனையில் நான் தைராய்டுக்காக சிகிச்சை எடுத்து கொண்ட ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் உண்மையாகவே GVK மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்திருந்தால் ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றும், நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, 7 வருடங்களுக்கு முன்பாக எடுத்த ஆவணங்களை நான் எப்படி தாக்கல் செய்ய முடியும்.

9) நான் பிரமாண பத்திரிக்கையில் 7ம் பத்தியில் குறிப்பிட்டுள்ளவாறு எதிர்மனுதாரர் என்னை வீட்டை விட்டு துரத்த வில்லை என்றும், நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் என்னை வீட்டை விட்டு துரத்திவிட்டார் என பஞ்சாயத்தார் முன்னிலையிலோ அல்லது போலிசாரிடமோ புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் பிரமாண பத்திரிக்கையில் 8ம் பத்தியில் குறிப்பிட்டுள்ளவாறு எதிர்மனுதாரர் என்னிடம் எங்கள் வீட்டில் அவருக்கு நகை கொடுக்கவில்லை என்பதற்காக பிரச்சனை செய்தார் என்று சொல்லும்போது, அதற்கான சாட்சிகளையோ, ஆவணங்களையோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

10) நான் எதிர்மனுதாரரிடம் இருந்து துர்லாபம் அடைய வேண்டும் என்பதற்காக 8ம் பத்தியில் பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் பிரமாண பத்திரிக்கையில் 9ம் பத்தியில் எந்த வருட தீபாவளிக்கு மனுதாரரின் வீட்டிற்கு, எதிர்மனுதாரருடன் சென்றதாக சொல்லியுள்ளேனா என்றால் இல்லை, 2017ம் வருடம் ஆகும். எனது நிரூபண பிரமாண பத்திரிக்கையில் வருடத்தை குறிப்பிடாமல் இருப்பதால் நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

11) எதிர்மனுதாரர் மனநிலை மாறிவிட்டது என நான் எனது பிரமாண பத்திரிக்கையில் குறிப்பிட்டுள்ளபோது அது எதற்காக என்றால் எனக்கும், திருச்சியை சேர்ந்த வினோத்குமார் என்பவருக்கும் தகாத உறவு இருந்ததால் அதனை எதிர்மனுதாரர் கண்டித்தும் நான் கேட்காததால் தான் எதிர்மனுதாருக்கு மனநிலை மாறியுள்ளது என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் என்னுடைய தகாத உறவினால் தான் தினமும் குடித்துவிட்டு வந்தார் என்றும், நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

12) எதிர்மனுதாரரின் அண்ணன் மற்றும் அவரது மனைவியுடன் எனக்கு பேச்சுவார்த்தை உள்ளதா என்றால் உள்ளது. தற்போதுவரை அவர்களுடன் பேச்சுவார்த்தை உள்ளதா என்றால் நான் எதிர்மனுதாரருடன் வாழும் வரை பேச்சுவார்த்தை இருந்தது. என்னை எதிர்மனுதாரரின் தந்தை 2017ம் வருடம் பங்குனி மாதம் எனது பெற்றோரின் வீட்டிற்கு எதற்காக கொண்டு விட்டுசென்றார் என்றால் எதிர்மனுதாரர் தினமும் குடித்துவிட்டு என்னிடம் தகராறு செய்வதால் என்னை விட்டுசென்றார். அன்று, எதிர்மனுதாரரின் தந்தை மட்டும் தான் என்னுடன் வந்தார் என்றால் சரிதான்.

13) நான் சொன்னவாறு சம்பவம் நடந்திருந்தால் என்னை எனது பெற்றோர் வீட்டில் விட நிறைய நபர்கள் வந்திருப்பார்கள் என்றும், வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. பொதுவாக, ஒரு பெண்ணின் வலைகாப்பு நிகழ்ச்சியை இருவீட்டாரும் சேர்ந்து தான் நடத்துவார்கள் என்றால் சரிதான். ஆனால், எனக்கு எனது வீட்டிலும், எதிர்மனுதாரரின் வீட்டிலும் தனித்தனியாக வலைகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது

என்றால் சரிதான், ஆனால் எதிர்மனுதாரரின் வீட்டில் வலைகாப்பு ஏற்பாடுகள் நடத்தியது குறித்து எனக்கு தெரியாது.

14) நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றும், எனக்கு ஒரு வலைகாப்பு தான் நடந்தது என்றால் சரியல்ல. நான் நிறைமாத கர்ப்பிணியாக இருந்தபோது தான் எனது கணவருக்கு அடிப்பட்டது என்றால் சரிதான். எதிர்மனுதாரர் எந்த மருத்துவமனையில் சிகிச்சை எடுத்து கொண்டார் என்ற விவரத்தை நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்னவாறு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், நிறைமாத கர்ப்பிணியாக என்னால் மருத்துவமனையில் இருந்திருக்க முடியாது என்றும், நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

15) கடந்த 15-09-2018 ம் தேதி GVK மருத்துவமனையில் எனக்கு ஆண் குழந்தை பிறந்தது என்றால் சரிதான். அதன்பிறகு, நான் எங்கிருந்தேன் என்றால் ஒரு மாதம் அம்மாவின் வீட்டில் இருந்தேன். ஒரு மாதம் கழித்து எங்கிருந்தேன் என்றால் எதிர்மனுதாரர் என்னை அழைத்து சென்றுவிட்டார். நான் எனது பெற்றோரின் வீட்டில் 3 மாதம் இருந்தேன் என்றும் எனது பிரமாண பத்திரிக்கையில் சொல்லிவிட்டு, தற்போது 1 மாதம் இருந்தேன் என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

16) எதிர்மனுதாரர் எந்த தேதியில் கணையம் அடிப்பட்டு சீகிச்சையில் இருந்தார் என்றால் 2018 வருடம் மே மாதம் ஆகும். அவரது உடலில் சிகிச்சைக்காக ஒரு டீயூப் வைத்து அதனை எடுக்க முடியாமல் சிகிச்சையில் இருந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அதற்காக எதிர்மனுதாரர் ரூ.8 லட்சம் செலவுகளை உள்நோயாளியாக இருந்து செய்துகொண்டார் என்றால் சரிதான்.

17) மேலும், அந்த சிகிச்சைக்கு பிறகு அவர் உடலுறவிற்கு தகுதியற்றவர் என மருத்துவர்கள் தெரிவித்ததை நான் தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. அந்த விவரம் எனக்கு தெரியும் என்றும், அதனால் தான் எதிர்மனுதாரரை உதாசீனப்படுத்திவிட்டு நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**(எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது).**

Witness (Sd)- Mathubala

Typed to my dictation in open court read over and explained to the witnesses in the presence of the accused and admitted by him to be correct.

Sd/. N.Eniya,
Judicial Magistrate No.II,
Sankari.

.